# 6.3 நான் ஒரு மந்திரவாதியானால்

## இலக்கு

*ஆக்க மற்றும் கற்பனை வழிகளில் காட்சிகளைக் காண மாணவர் ஊக்கப்படுத்தப்படுவர். மனக்காட்சிகள் இல்லாதவர்கள் எப்போதும் இயக்கமற்று ஒரே நிலையில் இருப்பர் என்பதை மாணவர் விளங்கிக்கொள்ள வேண்டும்.*

வகுப்பு 2 - 6

30 மணித்துளிகள்



**கருவிகள்:**
பிளிப் சார்ட்டில் வாக்கியதொடக்கங்கள் (அடுத்த பக்கம் பார்க்கவும்), முடியுமாயின் பணித்தாள் நகலாக ஆக்கலாம்

**நடைமுறை:**

- ஒரு மந்திரவாதி போல மாணவர் தம்மை நினைக்கவேண்டும். ஒரு விரிவான மனதை ஈர்க்கும் அறிமுகம், குறிப்பாக இளம் மாணவர்களுக்கு இன்றியமையாததும், தூண்டக்கூடியதுமாகும்.
- மாணவர் எழுதும் பலகை அல்லது பிளிப் சார்டிலிருந்து தொடக்க வசனங்களை வாசிப்பர்: "நான் பெரிய மந்திரவாதியானால், போரினால் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஒருபோதும் துன்பப்பட மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவேன்." அப்படி நடப்பதற்கு,...

  - நான் ... என்று தீர்மானிப்பேன்.
  - நான் ... என்பதைத் தடைசெய்வேன்.
  - நான் ... என்பதை உறுதி செய்வேன்.
  - நான் ... நிறுத்துவேன்
  - நான் தொடர்ந்து ...
  - நான் ... என்பதை மறவேன்

- தனியாகவோ, சோடியாகவோ மாணவர்கள் ஒன்று அல்லது பல வாக்கியங்களை எழுதி முடிப்பர்.
- பாடத்தை எளிதாக்குவதற்கு அறிவுறுத்தல்களும் தொடக்க வசனங்களும் மாணவர்களுக்கு பணித்தாள்களாகக் கொடுக்கமுடியும். (வாக்கியங்களை முடிப்பதற்குப் போதுமான இடம் வைத்துக் கொண்டு) தொடர்ந்து மீதியான வாக்கியங்களை முடிக்கும் விடயங்களை பிறிதொரு தொடரில் கொடுக்கலாம், அல்லது வீட்டு வேலையாக வழங்கலாம்.
- மறுமொழிகள் பின்னர் வட்டமாக இருக்கும் முழு வகுப்பிலும் வாசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு கலந்துரையாடப்படும். முடியுமாயின், தனியாள் பங்களிப்பான பின்னூட்டல் கேள்விகள் குறிப்புகளுக்குப் பின்னர் நேரம் ஒதுக்கப்படவேண்டும்.
- இறுதிச்சுற்று / சுருக்கம்: பல அல்லது பெருந்தொகை மாணவர்களால் எழுப்பப்பட்ட கருத்துக்கள் உள்ளனவா? பெருந்தொகை வேண்டப்பட்ட விடயங்களில் உண்மையாக நாம் என்ன செய்யலாம்?



**மாற்றுகள்:**

- "நான் ஒரு கட்டடக் கலைஞனானால்..." தங்கள் பள்ளி அல்லது நகரம் எப்படி இருக்கும் அல்லது இருக்கவேண்டும் என மாணவர்கள் கற்பனை பண்ணுவர்.
- "நான் ஒரு சனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதியானால் (வேறு அரச தலைவர், சனாதிபதி, நீதியமைச்சர் முதலியன) நான்..."